# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**STC.No.2/2022** **L.W.6** **P.W.5**

Name : கோவிந்தசாமி
Father/Husband Name : வெங்கடாசலம்
Age : 42
Village : வெண்கரும்பூர்
Taluk : திட்டக்குடி
District : கடலூர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.11.2022**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

**1.** நான் வெண்கரும்பூர் குடும்பத்துடன் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 முதல் அ.சா.3, பட்டியல் சாட்சிகள் மற்றும் ஆஜர் எதிரியை தெரியாது. அ.சா.4 பூவராகவனை மட்டும் தான் தெரியும். நான் சமூகம் நீதிமன்றத்தின் அழைப்பாணையை பெற்று சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். எனக்கு இவ்வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ. 3** ஆகும். மேற்ச்சொன்ன கையொப்பத்தை கடந்த ஏழு வருடத்திற்கு முன்பாக காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதி, அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் இ.சா.ச.பிரிவு 154 (1) ன் கீழ் குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 11-10-2019 ம் தேதி மாலை 6.30 மணிக்கு நானும், அ.சா.4 பூவராகவனும் வழக்கு சம்பவ இடமான நந்தப்பாடி பேருந்து நிறுத்தம் அருகில் நின்றுகொண்டிருந்தபோது பெண்ணாடம் போலிஸார் அங்கு வந்து வாகன விபத்து வழக்கு சம்மந்தமாக பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார்செய்து அந்த பார்வை மகசரில் அதே இடத்தில் வைத்து நாங்கள்இருவரும் சாட்சி கையொப்பம் போட்டு தற்போது பார்வை மகசரில் உள்ள கையொப்பம் காவல் நிலையத்தில் போட்டேன் என்று உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. நான் பெண்ணாடம் காவல் நிலையத்திற்கு வேறொரு விஷயம் சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு சென்றேன்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

**STC. No. 2/2022** **L.W.5** **P.W.4**

| | |
|---|---|
| Name | : பூவராகவன் |
| Father/Husband Name | : ஆறுமுகம் |
| Age | : 54 |
| Village | : வெண்கரும்பூர் |
| Taluk | : திட்டக்குடி |
| District | : கடலூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.11.2022**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

**1.** நான் வெண்கரும்பூர் குடும்பத்துடன் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 முதல் அ.சா.3, பட்டியல் சாட்சிகள் மற்றும் ஆஜர் எதிரியை தெரியாது. நான் சமூகம் நீதிமன்றத்தின் அழைப்பாணையை பெற்று சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். எனக்கு இவ்வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. தற்போது சமூகம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ. 2** ஆகும். மேற்சொன்ன கையொப்பத்தை கடந்த ஏழு வருடத்திற்கு முன்பாக காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதி, அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் இ.சா.ச.பிரிவு 154 (1) ன் கீழ் குறுக்கு விசாரணை**

1. கடந்த 11–10–2019 ம் தேதி மாலை 6.30 மணிக்கு நானும், சாட்சி கோவிந்தசாமியும் வழக்கு சம்பவ இடமான நந்தப்பாடி பேருந்து நிறுத்தம் அருகில் நின்றுகொண்டிருந்தபோது பெண்ணாடம் போலிஸார் அங்கு வந்து வாகன விபத்து வழக்கு சம்மந்தமாக பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார்செய்து அந்த பார்வை மகசரில் அதே இடத்தில் வைத்து நாங்கள்இருவரும் சாட்சி கையொப்பம் போட்டு தற்போது பார்வை மகசரில் உள்ள கையொப்பம் காவல் நிலையத்தில் போட்டேன் என்று உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. நான் பெண்ணாடம் காவல் நிலையத்திற்கு வேறொரு விஷயம் சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு சென்றேன்.